ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நமஃ

# சொரூபாநந்த விளக்கம்.

இது

திருவதருத்தி - இந்திரபீடம்

ஸ்ரீ கரபாத்திர ஸ்வாமிகளாதீனம்

பாசூர்-ஸ்ரீசச்சிதாநந்த ஸ்வாமிகள் திருவடித்தொண்டர்

ஆத்மஞானி

ஸ்ரீ - ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகள்

மாணவருளொருவராகிய

தே. அ. சாமி - குப்புசாமி அவர்களால்

இயற்றப்பட்டது.

சென்னை

கோமளேசுவரன்பேட்டை,

சச்சிதாநந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

விலை | | அணா 1

ஓம்

தத்சத்

பரபபிரஹ்மணே நம:

# சொரூபாநந்த விளக்கம்.

இது

திருசதருததி - இநதிரபீடம

ஸ்ரீகரபாததிர ஸ்வாமிகளாதீனம

ாசூர்-ஸ்ரீசச்சிதாநந்த ஸ்வாமிகள் திருவடித்தொண்டர்

ஆதமஞானி

ஸ்ரீ - ஐயாக்கண்ணு தேசிகமூாத்திகள்

மாணவருளொருவராகிய

தே. அ. சாமி - குப்புசாமி அவாகளால்

இயறறபபடடு

ஷை ஸ்ரீசச்சிதாநந்த ஸ்வாமிகள்

மாணாககருளொருவராகிய

வேதாநத வித்வத் சிரோமணி

ஸ்ரீமத் - பி. ஆறுமுக முதலியாரவாகளால்

பாாவையிடபபடடு

அநுபவாநந்தம்

ஸ்ரீமத் - தி. வேங்கடராமலு நாயுடுகார்

அவாகளால

சென்னை

கோமளேசுவரன் பேடடை,

சசசிதாநந்த அச்சியநதிரசாலையிற

பதிபபிககபபட்டது.

**1912.**

விலை] [அணா 1

# முகவுரை.

மனவுணர்வு வாய்ந்த ஒவ்வோருயிருஞ் சுகப்பேற்றையுந் துக்க நீக்கத்தையும் விரும்புவ தியல்பாம்; நம்முடைய முயற்சியு மவை பற்றியேயாம். நாமெவ்வகையாக முயற்சிப்பினு மவை பூரணமாகச் சித்தியாமை பற்றிக் கவலைக் கடலில்வீழ்ந்து பிறப்பிறப்புச் சுகதுக்க மூப்பிளமை முதலிய துவந் துவத்தினின்றும் செவ்விதின் மீளும்வழி காணாது பெரிதுந் துன்புறுகின்றோமென்பது பிரசித்தம். இத்துன்பத்தினின்றும் நாம் மீள்வகைகண்டுய்யுமாறு பரமேசுவரன் சுருதி ஸ்மிருதி புராணேதிகாசங்களைத் தம் முகத்தானுந் தம்மருள்பெற்றோர் முகத்தானும் வெளியாக்கி அவ்வப்போது அவை கூறிய வழி நாமொழுகுமாறு குருமூர்த்தி வடிவங்கொண்டு உள்ளவாறுள்ள நிலையை யுபதேசித்து அருள் புரிகின்றாரென்பதும் சாத்திரசம்மதாம்.

இவ்வனம் வெளிவந்த குருமூர்த்திகளுள் திருத்துருத்தி இந்திர பீடங் கரபாத்திர சுவாமிகளும் ஒருவராவர். அவர் வழிவந்தாருள் ஒருவராய் மஹாபிரசித்திபெற்றுவிளங்கிய ஈசூர், சச்சிதாநந்த சுவாமிகளின் நல்லருள் பெற்றநன்மாணாக்கருள் ஒருவராயும் ஆத்ம வித்தாயும், தம்மைஅடைந்த மாணவருக்குத் தத்துவத்தை ஐயந்திரிபற வுபதேசிக்கு மாற்றல் நிரம்பியவராயும் விளங்கிய சுபேதார் மேஜர் ஸ்ரீஐயாக்கண்ணு தேசிக மூர்த்திபிடத்துத் தமியேனுக் கநுக்கிரக வாயிலாகச் சித்தித்த ஆத்மாநுபவப் பேற்றை நூல் வாயிலாக மந்தணமின்றித் தெரிவித்திருக்கின்றேன். இங்ஙனம் தெரிவித்தது புகழ்நோக்கியும் பொருள்நோக்கியும் அன்றாம். இந்நூலை விசுவாசத்துடன்படிப்பார் துக்கத்தொகுதியையும்அதன் மூலத்தையும் இப்பிறவியிலேயேயகற்றி யினியென்பதில்லாத இன்ப நிலையை அடைவார்களென்பது எனது பூரணமான எண்ணமாம். சொரூபம் என்பது ஆன்மாவாம். ஆநந்த மென்பது அதன் வடிவாம். விளக்கமென்பது அதனை விளக்குவதாம். எனவே, சொரூபாநந்த விளக்க மென்பது சொரூபாநந்தத்தை விளங்கச் செய்யும் நூலென்ன இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைப் பெயராம். அல்லது அடையடுத்த ஆகுபெயருமாம். இந்நூல் வாயிலாக யானடைந்த குருவருட்

பேற்றை வெண்பா வடிவமாகப் பாடித் தக்காரைக்கொண்டு திருத்தி யச்சிடுவித்தேன். இந்நாலில் யானறிந்த திருசிய வநுபத்தையும், திருக் கனுபவத்தையும், திருசிய வனுப நீக்கத்தால் வெளிப்படும் நிரதிசய வின்பத்தையும், மறையாது கூறியிருக்கின்றேன்.

இந்நாலை யெனது நண்பர் திருவொற்றியூர் ஸ்ரீமத்- அநுபவாணந்த-தி. வேங்கடராயலு நாயுடவர்கள் அச்சுவாகனமேற்ற விசைந்தகாலத்து உடனிருந்து பரிசோதித்துத் தந்த எனதுபோசிரியரின் மாணவருளொருவராகிய வேதாந்த வித்வத் சிரோமணி ஸ்ரீமத்-பி. ஆறுமுக முதலியார்பால் யான் மிக்கநன்றியறிதலுடையேன். இதனை யென் மனங்களிக்க விரைவில் அச்சிட்டுத் தந்த சச்சிதாநந்த அச்சியந்திர சாலையாரது அன்பும் மறக்கற்பாலதன்று. பிழையுளதேல் உலகம் பொறுக்க.

இப்புத்தகத்தால் வரும் பணத்தை ஈரூர் ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகள் குருபூஜைக் காலத்துச்செய்விக்கும் மாகேசுவர பூஜைக்குதவப்படும்.

## இப்புத்தகம் கிடைக்குமிடங்கள்.

சென்னை, தம்புசெட்டிவீதி

,, ரிப்பன் பிரஸ்.

,, கலாரத்நாகரம் பிரஸ்.

,, கோமளேசுவரன் பேட்டை,
சச்சிதாநந்தம் பிரஸ்.

ஈரோடு, கோள்டன் பிரஸ்.

உ

# சாற்றுக்கவிகள்.

திருவருட்பிரகாச வள்ளலார் மரபு

காஞ்சீபுரம் - ஸ்ரீமத்.

## நிச்சல. இராமநந்த சுவாமிகள் இயற்றி யருளிய

எழுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

உலகெலா மோங்கி யொளிர்பரம் பொருளை
யுணர்ந்தது வாகியெஞ் ஞான்று
முலகிய லூற்றிங் குயிர்களு முய்ய
வொளிர்சொரூ பாநந்த விளக்க
மிலகிடத் தந்தான் விண்ணமு தெனவே
வெழிற்சச்சி தாநந்தன் மரபிற்
றிலகநங் குப்பு சாமிநா வலன்றன்
றெளிவினைச் செப்புதற் கெளிதோ.

ஈரூர். ஸ்ரீ. சச்சிதாநந்த சுவாமிகள் பிரதம மாணாக்கர்

## ஸ்ரீமத் அ. முனிசாமி நாயகரவர்க ளியற்றிய

வெண்பா.

மெய்யாகும் வேதாந்த மேருமலை மேல்வசிக்கு
மய்யாக்க ணைசான ருள்பெற்றுப் - பொய்யாப்
புகழ்சொரூபா நந்த விளக்கம் புகன்று
ணிகழ்குப்பு சாமி நிலைத்து.

## ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியா ரவர்கள்

இயற்றிய வெண்பா.

நந்துஞ் சுருதியர்த்த நன்குணர மேவசொரூபா
நந்த விளக்கமது நன்றாகப் - பந்த
மறுகுப்பு சாமிநலா னன்பாகச் சொற்றான்
பெறுவார்க்கி துண்டோ பிறப்பு.

சென்னை-பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டா யிருந்த

## ஸ்ரீமத் - பூவை. இராஜரத்தின முதலியார் பீ. ஏ.
## அவர்கள் இயற்றிய

அறுசீர் விருத்தம்.

பொன்னுரு மீசூர்ச்சச் சிதாநந்தப் புனிதன்றாள் பொருந்தி நின்ற, மன்னுரு மன்பன்சு பேதாரெ னப்புவியோர் மகிழ்ந்து சொல்லுந், தன்னுரு மையாக்கண் ணிருபாதந் தனையடைந்த தன்மை யேய்ந்த, தன்னுரு மென்னண்பன் சாமிகுப்பு சாமி யென்னுந் தக்கோன் மாதோ.

சொன்னயமும் பொருணயமுஞ் செறிந்திலகு மாண்புடைய சுத்த வாக்கி, லென்னயமு முள்ளசொரு பாநந்த விளக்கமதி னினிமை தன்னைப், புன்னயமு முற்றுணர்ந்த பாவலரு நாவலரும் படிக்கத் தோன்றுங், கன்னயமுங் கரைந்துருகக் கவினயத்தைக் கனிவுறவே கழறி னனே.

தர்க்கவேதாந்த போதகாசிரியர்

## ஸ்ரீமத் - வே. முருகேசமுதலியா ரவர்க ளியற்றிய

வெண்பா.

செய்யா மொழிப்பொருளைச் சீர்பெற் றுலகறிய
வய்பா நநத்தா னருள்கொண்டு - பொய்யாவா
நந்த முறச்சொருபா நந்தவிளக் கஞ்சொற்று
கந்தலில்குப் புச்சாமி நன்கு.

வித்துவான் ஸ்ரீமத்.

## ம. இராஜகோபால பிள்ளை அவர்களியற்றிய

வெண்பா.

நிகமாந்தங் கண்டுநிலை நின்றுநிஜா நந்த
சுகமாந்த நல்கினன் றெல்லு - லகமாந்தர்
செப்புசொரு பாநந் தவிளக்கச் செய்யநூல்
குப்புசா மிப்புலவர் கோன்.

ஸ்ரீ சத்திய ஞானாநந் தாநந்தேந்திர சாஸ்வதியதி
பரமஹம்ச சந்நியாசி யவர்களருளிய
வெண்பா.

சாமிகுப்பு சாமி தனது சொரூபம் விளக்கிப்
பூமியுய்ய வேதாந்தப் புண்ணியநூல் - காமிகமற்
றுண்மைவிளக் கஞ்செய்தா னேங்குசச் சிதாநந்தன்
றண்மையரு ளாகுமது தான்.

ஸ்ரீமத்-பவழை. தங்கவேலையரவர்கள் மாணாக்கர்
பிரசங்காமிர்தம் ஸ்ரீமத். நடேசநாயகரவர்க ளியற்றிய
அறுசீர் விருத்தம்:

அன்னியமொன் றில்லாத வறிவேநஞ் சொரூபமென
வனுப வத்தே
பன்னுசொரூ பாநந்த விளக்கமெனப் பகர்ந்தான்மிக்
கறிவி னுய்ந்து
மன்னியசி ரிந்திரபீ டந்தழைத்த மரபினனை
யாக்கண் டானே
யுன்னியநல் லன்புடைநங் குப்புசா மிப்பெயர்கொ
ளுண்மை யோனே.

ஸ்ரீசச்சிதாநந்த சுவாமிகள் மாணவர்
வித்வான்—இராயபுரம்
ஸ்ரீமத் - சேனியப்ப நாயகரவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வானாளு மிந்திரர்க்கு மொருதனிமூ வானவர்க்கு
மனக்கெட் டாதாய்த்
தேனாளு நாவுடையாள் பாரதிநா யகனுஞ்செங்
கமல பீடக்
கோனாளு நான்மறைக்குங் கொழுக்கொம்பாஞ் சுவாநுபவன்
குப்பு சாமி
தானாக நிறுசொரூபா நந்தவிளக் கம்மெனுநூ
றந்திட் டானால்.

ஸ்ரீமத்-மஹாவித்துவான் - கோ. வடிவேலு செட்டியாரவர்கள்
மாணவர். பிரசங்க சிந்தாமணி, சங்கத்வனி
சோடசாவதானம்.

## தே- கிருஷ்ணசாமிப் பாவலரவர்களியற்றிய

### அறுசீர்விருத்தம்

நதிபொதிசெஞ் சடையெம்மா னமக்களித்த நான்மறையின்
ஞான மார்க்கப்
பதிநிலை யீதென்று பரசொரூபா நந்தவிளக்
கத்தாற் பன்னித்
துதிபெறுநல் லையாக்கண் பேர்படைத்த குருநாதன்
றுணைத்தாட் கன்பு
பதிபெறுநற் குணம்வாய்ந்த சாமிகுப்பு சாமியென்பான்
படைத்தான் சீரோ.

## பிரம்பை - பொன்னுவேற் பிள்ளை யவர்கள் இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

நான்கண்ட நற்சொரூபா நந்தவிளக் கம்மிதென
நாளு நாடி
வான்கண்ட வளமமிர்தின் வருசுவையா வரும்புகழ்ந்து
வாழ்த்தி வாழத்
தான்கண்ட தகவுண்மை தனையெங்கள் சாமிகுப்பு
சாமி சாற்றி
யூன்கண்ட வுடம்பளவா வுணர்வுடையோ மொருங்குணர
வுதவ லுற்றான்.
ஆறுமுக வணிநிலவை யணிந்தபிரா னருண்மகவா
மழக னென
கூறுமுக மாறுடைய குமரவேள் குஞ்சிதத்தாள்
குறித்து வாழ்வான்
வீறுமுக வேதாந்த விளங்குறுசித் தாந்தநூல்
விரிவைக் கண்ட
ஆறுமுக வபிதான மடைந்தவனிங் கனைபிறைசிக்
கறுத் தளிக்க.

இனிதவா நிலையறிந்த பெரியோர்க ளிணையடியை
யிறைஞ்சி மிக்க
புனிதவா சகப்பொருளைப் போற்றியுளக் குறும்பறுத்தார்
புகழ்ந்து கோட
மறுதவா மொழிக்கிணங்கு மாந்தரெலா மதித்தோதி
மகிழ்ச்சி மாந்த
வறுபவா நந்தவேங் கடராய வேளச்சிட்
டளித்திட் டானல்.

வித்துவான் - திருமயிலை,

வெள்ளியம்பலப்பிள்ளை யவர்கள் குமாரர்,

## ஸ்ரீமத்-திரு - சிவராஜம் பிள்ளையவர்களியற்றிய

### நிலைமண்டிலவாசிரியப்பா.

பாற்கடற் றுயில்புரி பண்ணவ னுந்திப்
பதும மளித்த சதுமுகன் மொழிந்த
வேத சாரமாய் விளங்குவே தாந்த
நூல்பல கற்றும் நுண்ணிய ராகிச்
சால்புடைத் தவம்பெறு தக்கமே தாவியாஞ்
சுந்தர மிகுந்த விந்திர பீடத்து
வந்துமுன் னுதித்த வந்தமில் புகழோன்
வரபாத் திரமெனுங் கரபாத் திரக்குரு
வழிமுறை நூல்கள் வரம்பின் றுணர்ந்திங்
குலகிலத் துவித வுண்மையாம் விதையை
யிலகுறப் பதித்த வீரு ருதித்தோ
னச்சினார்க் கருளுஞ் சச்சிதா னந்த
னுச்சித பதத்தை மெச்சியே சிரங்கொ
ளய்யாக் கண்வழி யருமொழி யுணர்ந்தோன்
ஞானசாத் திரமு னவையறத் தேர்ந்து
மானமெய் யொளியே மகிழ்வுறத் தானாய்
விளங்கிடு முண்மை விளக்கம துற்றோன்
வானூர் சோலைசூழ் தேனும் பேட்டையிற்
சான்றவ ரெங்குலத் தோன்றலங் கப்பன்

செய்தவப் பயனுஞ் சீர்பெற வுதித்தோன்
மேதகை யரும்புகழ் போத விளக்கப்
பனுவன்முற் றந்த கனிமொழி வாக்ய
னொப்பிலாச் சாமி குப்புசா மிப்பேர்
நாவல னிந்நாள் நம்மவர் வியக்கப்
பாவலர் வியக்கப் பண்டிதர் வியக்க
மேவலர் சிரங்கள் விரைவினி லிறங்க
நன்மைசேர் சொரூபா நந்த விளக்க
மெனுநூ றந்தன னிதன்சிறப் பெடுத்து
விளக்குத லரிதிம் மேதினி மீதே
யத்தகு நூலினைச் சுத்திசெய் திடுவான்
தன்னா சிரியன் றன்னொடு பயின்றோன்
பாதி மதியணி பரமனா ருறைதரு
மாதி புரியே யமர்தரு வாழ்க்கையான்
றாயுமா னவர்முதல் தருபல நூல்களும்
பிரபுலிங் கலீலையும் பிறங்குவே தாந்தப்
பன்னூல் களுக்குந் தொன்னெறி யுரைசெய்
பிரசங்க மாரி பிரச வாரியாய்ப்
பொழிதரு வேளாண் புலவனென் னன்ப
னாறு முகப்பெயர் வீறிய நாவலன்
றன்மையாத் திருத்தித் தந்தனன் மாதோ.

## சிவகங்கை - ஸ்ரீமத் - முனியப்பசுவாமிக ளியற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆனந்த மேயறிவு வறிவேயா னந்தமென வார ணஞ்சொன்
மோனந் தழைத்தவனு பவமுனிவ னையாக்கண் முதல்வன் றளைத்
தானந்த மின்றிமொழி சாமிகுப்பு சாமியெனுந் தக்கோன் சொற்
வூனந்த விருசொரூ பானந்த விளக்கமிக வுசித மோரே. [ற

ஸ்ரீமத் - இராமாநந்த சுவாமிகள் மாணாக்கர்

## ஸ்ரீமத் - சொரூபாநந்தமணிசுவாமிக ளியற்றிய

### நேரிசை வெண்பா.

சொரூபாநந் தப்பொருளைத் தொன்னெறியே கண்டு
சொரூபாநந் தக்குப்புச் சாமி - சொரூபம்

விளங்கிடவெ சொற்றான் வியன்சொரூபா நந்த
விளக்கமது கண்டுணர்தல் மேல்.

திருவொற்றியூர் ஸ்ரீநந்தீசுவரர் மடாலயம்

## ஸ்ரீமத்-சண்முக சுவாமிக ளியற்றிய

நேரிசை வெண்பா.

சொரூப விளக்கமெனுந் தோலாநன் னூலொன்
றுருவா நிலேவரற்கிங் கோதிப் - பருவ
மறிந்திங் கவரவர்க்கா வன்போ டளித்தா
னறிவுருகுப் புச்சாமி யாய்ந்து.

இந்நூற் பரிசோதகராகிய

ஸ்ரீமத் - பி. ஆறுமுகமுதலியாரவர்கள் மாணாக்கருளொருவர்

## ஸ்ரீமத்-திரு.நாராயணசாமி கிராமணியாரவர்கள்

இயற்றிய

கட்டளைக்கலித்துறை.

கரபாத் திரர்மா பிற்றெளி வையாக்கண் கல்விவல்லோன்
வரபாத மேத்திய பன்னூ றெளிந்த வசையில்புக
லரணும மேதுதி குப்புசா மிப்பே ரறிஞனிந்நாள்
சிரமேற் கொளச்சொரூ பானந்த தீபந் தெரித்தனனே.

ஷை முதலியாரவர்கள் மாணாக்கர்

## ஸ்ரீமத்-ந. குப்புசாமிப்பிள்ளை யவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

ஆதியந்த மீதென் றறிந்தகுப்பு சாமியெனு
நீதியனங் காய்ந்துரைத்தா னின்மலத்தைப் - போதிக்குஞ்
சோதிசொரூ பாநந்த விளக்கஞ் சுகமாக
வேதமிலா திங்கெவர்க்கு மே.

ஷை முதலியாரவர்கள் மாணாக்கர்

## ஸ்ரீமத் - கோ. சி. இராஜுபிள்ளை யவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

வேதத்தி னுண்மையிது வேறற்ற தன்னிலையென்
றோதரித்தங் காய்ந்தே யறைந்தனனால் - சீதசொரூ
பாநந்த நல்விளக்கம் பண்பார்குப் புச்சாமி
யாநந்த மாக்குமென வாய்ந்து.

வித்துவான் ஆ - மே - சென்ன கேசவலு நாயுடவர்கள்

மாணாக்கருளொருவர்,

## பிரம்மஸ்ரீ சி - கி - சுந்தராச்சாரியா ரவர்களியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பெறலருமா னுடப்பிறவி பெற்றவரெப் பிறப்பினுக்கும்
பெருவித் தாய
தெறலருமெய்ஞ் ஞானவிரு டெறவுயர்வா நிலையதனிற்
செழித்து வாழ
விறலறுமெய்ஞ் ஞானசொரூ பானந்த விளக்கவொளி
விரித்தான் கண்டீ
ருறலருமை யாக்கணடி பணியுங்குப் புச்சாமி
யொள்ளி யோனே.

புதுவண்ணாரப்பேட்டை

## ஸ்ரீமத்-முருகப்பகிராமணியாரவர்கள்

இயற்றிய

### நேரிசை வெண்பா.

சச்சிதா நந்தன்றன் றன்னடியைப் போற்றுவதுஞ்
சச்சிதா நந்தமதாத் தானதற்—குச்சிதமா
நிட்டை புரிகுவது நீங்காக்குப் புச்சாமி
சட்டவிளக் கஞ்செய்தான் றன்.

## ஸ்ரீமத் - த. விஜய துரைசாமி கிராமணியாரவர்கள்

இயற்றிய.

நிலைமண்டில வாசிரியப்பா.

நல்ல சொரூபா நந்த விளக்கமென்
றெல்லையில் புகழ்பெறு மினிய நூலினைச்
சூரியன் மரபிற் றோன்றிய சாமி
குப்பு சாமியா மொப்பிலாப் புகழோன்
கரதலா மலகமா வரனொடு கொள்ளத்
தந்தன னதன்புகழ் சாற்றுத லரிதே.

உரையாசிரியருஞ்-சைவப்பிரசாரணருமாகிய

ஈக்காடு-இரத்தினவேலு முதலியாரவர்கள்

ஜேஷ்டகுமாரர் வித்துவான்

## ஸ்ரீமத்-ஈ. சபாபதி முதலியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சச்சிதா நந்தனடி சாரையாக் கண்பாற்றோர்
விச்சைக்குப் புச்சாமி மேலோன்ற—னிச்சகத்தி
னல்லவருக் குச்சொரூபா நந்தவிளக் கந்தான்
வல்லறிஞர் கொள்வார் மகிழ்ந்து.

தண்டைமாநகர்

## ஸ்ரீமத் - வையித்தியலிங்கம்பிள்ளையவர்கள்

இயற்றிய நேரிசைவெண்பா.

உண்மையுணர் ஞானியெனு மோங்குகுப்பு சாமிமா
றண்சொருப நல்விளக்கஞ் சாற்றினு—னெண்மையினு
மேற்றற் கிதுநன்று மேகவுரு வாகுமவர்
போற்றற்கு நன்றும் பொருள்.

பாரிப்பாக்கம் ஸ்ரீமத்-முனியப்ப சுவாமிகள் மாணாக்கர்

## ஸ்ரீமத்-தி. அகிலாண்டகிராமணியாரவர்கள்

இயற்றிய நேரிசை வெண்பா.

அத்துவித வுண்மை யறிந்த வறிவுடையோர்
சித்தமய லற்றதிர ஞானியரா - மத்துவிதம்
பெத்தர்களும் பேசிப் பிதற்றுவா ரன்னவரும்
சுத்தமுறு முத்தமரோ சொல்.

சொல்லற்ற மோன சுகந்தருஞ் சிற்சொருப
நல்ல விளக்கநா னன்கிசைத்தா-னில்லறத்திற்
குப்புசா மிப்பெயரோன் கூடியுங் கூடாதா
னிப்புவியிற் றானு மிருந்து.

## சதுரை-ஸ்ரீமத். அ. தில்லைமன்னன் சிதம்பரம் அவர்கள்

இயற்றிய நேரிசைவெண்பா.

மெய்ச்சொரூபா நந்த விளக்கமெனு மோர்கடலை
யுச்சிதமாய் மொண்டிட் டுலகமெலா - மெச்சப்
பொழிந்ததே தேனைக்குப் புச்சாமி யென்னுங்
குளிர்ந்தகார் கொண்டல் குழாம்.

பாலகவி -

ஸ்ரீமத் பெ - சூ - பாலராஜம் பிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

மாயவலை யிற்படிந்த மாவுலக மாந்தர்க்குத்
தூயநிலை வாய்க்கச்சொற் றிட்டானற் - பாயகலை
நன்மார்க்கச் சிற்சொரூபா நந்தவிளக் கம்மெனுநூல்
சன்மார்க்கக்குப்புசாமி தான்.

இந்நூலாசிரியரி னாசிரியர்பா லனுக்கிரகமடைந்த
செஞ்சி - ஸ்ரீமத்-இரத்தினவேலப்பா அவர்கள் இயற்றிய
நேரிசை வெண்பா.

சந்த முறப்புவியிற் சாருஞ் சொரூபா
நந்த விளக்க நவின்றிட்டான்—சொந்தப்
படிப்பார்குப் புச்சாமிப் பாங்கார் புலவ
னடிப்பா நடலையற நன்கு.

சம்பத்கிரி - பிரமபீடம்
ஸ்ரீ அச்சுதாநந்த சுவாமிகளின்
மாணாக்கருளொருவராகிய
வல்லநகர்
ஸ்ரீமத்-வைத்தியலிங்கம் பிள்ளையவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

தன்னை யுணரார் தனைவிட் டயலுணர்வார்
என்னை யுணர்வென் றினிதிரங்கித் - தன்னை
விளக்குஞ் சொரூப விளக்கந் தனையளித்தான்
களக்கங் கெடநன்கு காண்.

ஆங்கவன்யா ரென்னி னரிய குருளா
லோங்கு மூணர்வா யொளிர்தருநற் - பாங்குடைய
சாமி யெனுங்குப்பு சாமி யெழிற்கருணை
நேமி யிவற்கார் நிகர்.

இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவர்
ஸ்ரீமத் - நெ. கேசவலு நாயுடவர்களியற்றிய
கொச்சகம்.

திருத்தருத்திந் திரபீடங் காபாத்ரச் செம்மல்வழி
யருத்தியுரு வாமெங்கோ னையாக்க ணருண்மொழியென்
கருத்திருத்தி நற்சொரூபா நந்தவிளக் கந்தேவ
தருக்கந்த தெனக்குட்பு சாமிகுரு தந்தனனே.

இந்நூலாசிரியர் மாணாக்கரு ளொருவர்

ஸ்ரீமத் - தொப்பா - அரங்கசாமி முதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசை வெண்பா.

பின்னைப் பிறப்பறுக்கும் பெம்மான்குப் புச்சாமி
யென்னைப் பொருளை யெழிலுடம்பேற்—றின்னசொரு
பாநந்த நல்விளக்கம் பாங்கினளித் தாரெழுந்த
வாநந்த மெல்லையிலே யால்.

# சிறப்புப்பாயிரம்.

சென்னை, பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

பூவை - கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் மாணாக்கர்

ஸ்ரீமத் - வித்துவான் -

ஆ. மே. சென்னகேசவலு நாயுடவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பெண்கொண்ட மணிமார்பன் மதிநதிகொள் புரிசடையோன்
பொலிவினோடு
மண்கொண்ட சுவையறிய வகையின்றி மறிதிரைகொள்
வாரி யின்கண்
டன்கொண்ட வறிதுயிலும் வரையிடத்திற் குடிகொண்டு
தாங்க ளோங்க
நன்கொண்ட னிகர்குப்புச் சாமிவே ணுவாணி
நண்ணி னாளே. 1

புலவரெனப் புவிமீது பெயர்படைத்த வநந்தம்பேர்
புரையில் லாத
நலமலிநூ லொன்றேனு மியற்றுமன் மனம்வருந்தி
நாணங் கொண்டார்
பலநலநூ லினிதுணர்ந்த வையாக்கண் ணுரியன்றன்
பதத்தைப் பேணி

நிலவுலகில் குருஸ்தவமும் போதவிளக் கம்மெனுநூ
னிகழ்த்தி னானல். 2

கற்றோர்கள் மிகக்களிக்கக் கல்லாரு மினிகற்கக்
காதன் மூன்று

மற்றோர்க ணிட்காமப் பலனடைய வறத்துறந்தோ
ரரிய ஞானம்

பெற்றோர்க ளாய்க்களிக்கச் சொரூபானந் தம்மெனுமோர்
பெருநூ றன்னை

யுற்றாய்ந்த குணதிலகன் குப்புச்சா மிப்புலவ
னுரைத்தான் மன்றோ. 3

நல்லார்க ளிணக்கமுடன் பொறைவாய்மை மிகுதூய்மை
நண்ணி னாரு,

மில்லாரு மறம்பலவு மினிதியற்றித் தவநாரு
மின்ப மாகச்

சொல்லாரும் புகழுடனே சோர்வின்றிச் செய்துவருந்
தூய்மை யாளன்

எல்லாரும் ஞானமுடைக் குப்புச்சா மிப்புலவ
னியற்று நூலே. 4

நூலென்று புலவரெலாங் கொண்டாட வுண்மையதாய்
நுட்ப மாகப்

பாலொன்று மினியசொரூ பானந்த விளக்கமதைப்
படிப்போர்க் கின்றே


மேலொன்று நன்னிலையை மேவியுடன் சுகமாக
மிளிர்வ ரென்றன்

பாலொன்று மன்புமிகுங் குப்புச்சா மிப்புலமை
பகரற் பாற்றே. 5

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நமஃ.



உ

# சொரூபாநந்த விளக்கம்.

## பாயிரம்.

### சொரூபவணக்கம்.

எப்படியுந் தானா யிலங்கிடுவ தெப்பொருளோ
வப்படியுந் தானா யறிந்திங்குச்—செப்பதனாற்
போற்றியா னேற்றேன் புகலவே றின்மையினாற்
சாற்றினே னேற்றமதாத் தான். 1

### குருவணக்கம்.

**அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.**

நாரணத் தேவு மாகி நான்முகத் தேவு முக்கட்
காரணத் தேவு மாகிக் காத்தளித் தழித்துத் தானா
யாரண முடிவி னின்ற வரும்பொருள் குருவா வந்து
தேரொணா முடிவைக் காட்டத் தெளிந்தன னெங்குந் தானாய். 2

**எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.**

நவநவமாக் கண்டுணர நாட்டந் தந்தா
னாட்டமுறப் பிறப்பின்வரு நடுக்க நீங்கித்
தவமூவேழ் தலைமுறையுஞ் சார்ந்து முற்றத்
தனியின்பே சதாவுணர வென்றுந் தானா
யெவமறமே முத்தியெனுங் கரையிற் சேர்க்கு
மிருங்கள்வன் கண்டுணர்மி னீதே யன்றிக்
கவையறவே பொறிகடமாற் காணாக் கள்வன்
கருதினவ னெவனெனிலோ காணிற் றானே. 3

திரிச்சிராப் பள்ளிவிட்டுச் சென்னைநகர் மேவி
யுருக்கமுட னென்னைக்கூ யுற்றுத் - திருக்கண்ணாற்
பார்த்தோர் மொழியாற் பதைப்பற் றிருவென்றான்
தீர்த்தனையாக் கண்ணனெனுந் தே. 4

## இந்நூற்பெயர்க் காரணம்.

சொரூபா நந்த விளக்கமெனச் சொற்றிடும் வேத மெல்லாஞ்
சொரூபா நந்த விளக்கமது சூழின் விளங்கு முலகமெலாம்
சொரூபா நந்த விளக்கமதைச் சொல்லு மிந்த நூறனக்குச்
சொரூபா நந்த விளக்கமெனச் சுகிக்கப் பேர்தா னிட்டேனால். 5

வேகமா மனத்தை வென்று வெளிப்பட்டுள் விளங்கி னார்முன்
னாகமே சொருப மாக வறிந்துமெய்ச் சொரூபங் காண
வூகமின் மனித ருப்ப வோதினே னிந்நூ றன்னைத்
தாகமார் மலத்தை வென்று தணித்திடு முண்மைத் தாமால். 6

## இந்நூற்பயன்.


சச்சிதா நந்தன்றன் றுடலைமேற் கொண்டன்றோ
விச்சையுட னிந்நூ லியற்றினதாற் - றச்சுமலந்
தன்னை யகற்றிவிடுந் தக்கசுகந் தந்துவிடு
மன்னுநிலை வந்துவிடு மால். 7

## அவையடக்கம்.

ஆசையைமுன் னிட்டே யகமுகத்தி லிந்நூலைப்
பாசமக லாப்பண்பன் பாடினேன் - னேசமுட
னேற்றுத் தனைக்கண்டா ரேற்பரோ வேற்காது
தூற்றுவரோ வென்றே துணிந்து. 8

காக்கப் படுபொருடான் காணி னடக்கமென்ப
ரூக்கமுட னன்னதனை யோராதேன் - யோக்கநிலை
யுற்றுணர்ந்தார் போலவே யோதினே னிந்நூலை
நற்றவர்முன் நாணும னான். 9

இலக்கண விதிக ளேது மிங்கறிந் துற்றே னல்லே
னிலக்கண விதிக ளுற்றிங் கின்னிசை யுற்றார் முன்னே
துலக்கமின் மலக்கண் கொண்டு சொல்லினேன் வெண்பா வாக
புலக்கணாற் றறிவுள் ளோர்கண் மகிழ்ந்துமெய் யறிவர் தாமே. 10



உ

# சொரூபாநந்த விளக்கம்.

## நூல்.

### சச்சிதாநந்தஞ் சார்வகை கூறல்.

சத்தாகி யென்றுந் தனித்தபொருள் யாததுவே
சித்தின்ப மாகித் திகழ்ந்திடுத - லெத்திறத்து
மென்று மறைக ளியம்புதலா லப்பொருளைத்
துன்றுதலென் றேநீர் துணிந்து. 1

### புலவர்கடங்கள் புன்செயல் விளக்கல்.

தனியிருந்து தன்னைத்தான் தக்கபடி காணு
மினியமொழி கூறி யெவர்க்குந் - துனிவகற்றக்
கல்லாம லென்றுங் கலகஞ்செய் தேதிரிவீர்
வல்லார்க்கும் பொல்லாராய் வந்து. 2

கொக்கொத்துத் தன்னைக் குறியகலக் காண்பதுவே
மிக்கநிலை யென்றநிலை மேவாது - பக்கிகள்போல்
சுற்றித்தர்க் கிப்பீர் துயரகலாத் தக்கனென
வெற்றிக்கோ வீண்புரளி யிங்கு. 3

அற்ற மறைப்ப ரரிய ரெனப்புலவர்
சொற்ற மொழியுணராத் துல்லியர்காள் - கற்றதுதா
னெற்றிற்கோ வென்றுணரீ ரீதுணரின் மற்றவர்தங்
குற்றமது கூறுவீரோ கொண்டு. 4

நூலுணர்விங் குற்றதுபோ னுண்ணுணர்வு முற்றுமெனின்
மாலுணர்வு மன்னுறுமோ மாப்புலவீர் - மேலுணர்வைத்
தோலுணர்வாக் கொண்டுதினந் தொல்லையுற லெற்றுக்கோ
சாலவுநீ ரிங்கிருந்து தான். 5

அகத்தொன் றிலாதுவிளை யாடுபுறத் தென்றே
மகத்தாம்வா சிட்டமுறை மாண்பைப் - பகுத்தறியா
தேயிகத்து ருக்கொண்டீ ரேமாந்தீர் பண்டிதர்க
ளேயினுஞ்சு கந்தெரியா திங்கு. 6

கல்விகற்றுக் கேள்விகளைக் கற்றவர்பால் கேட்டிடினு
மல்லும் பகலு மவரவர்க்குச் - சொல்லிடினும்
நல்லியல்சேர் ஞானமது நண்ணுறுமோ மாப்புலவீ
ரெல்லையிலின் பம்வருமோ விங்கு. 7

துன்பமொழித் தின்பமுறச் சொற்றிடுநல் வேதமெலா
மென்பகற்றுந் துன்பொழிக்கா தென்செய்தீர்-வன்கிளிபோற்
சொன்னதையே சொல்லித் தொலைத்தீர்நன் ஞானமெலா
மென்ன தவமிதுவோ விங்கு. 8

பாட்டா லுரையால் பகட்டுகின்றீர் பாமரரைப்
பாட்டு முறையும் பயன்றருமோ - நாட்டமுறு
நல்லறிவி தென்றுரைக்கு நற்கல்வி கற்கிலீர்
வல்லமையே சும்பரிசோ மாண்பு. 9

சங்கற்பத் தாக்கறுக்கச் சத்தியிலா தென்படித்தீ
ரிங்கற்பப் புத்தியுளீ ரென்செய்தீர் - சங்கற்ப
மற்றவிட மேமுத்தி யதுவே பரம்சுக
மற்றவிட மேதுன்ப மாம். 10

## செயற்கரியதைச் செய்திலோ மெனல்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅரெனின் நாங்கற்று - முற்றுணர்வான்
றன்னடியைப் போற்றுகிலோஞ் சாற்றோம் மலர்கள்பறித்
தென்னாவோ மின்றிங் கிருந்து. 11

## நெஞ்சோடிரங்கி நீண்மொழி கூறல்.

வேண்டுதல்வேண் டாமை யிலானடிசேர்ந் தார்க்கீ
யாண்டு மிடும்பை யிலையென்ற - மாண்டவுரை
கேட்டு மனமே கெடுவதெலா மேற்கொண்டு
வாட்டுவதென் னென்னையினும் வந்து. 12

வாய்மதத்துப் பேசின் வருமோதன் னுண்மைநிலை
யேய்ந்தவறி வாகிலது வேயுமோ - வாய்ந்தறிதி
யென்று பெரிய ரியம்புமது கேட்காம
லென்றும்பேச் சால்வதைத லென். 13

### மனத்தின் கவலையை மாற்றற் குரைத்தல்.

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கன்றே
மனக்கவலை தானே மடியு - நமக்கென்
றுரைத்து மதுவதுவா யோயாது நிற்பங்
கரைத்துத் தனித்திடற்கே காண். 14

### தெய்வவழிபாடு தேறவுரைத்தல்.

கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலையென்ன - நாளெல்லா
மெல்லாப் பொறியாலு மீங்கிடர்ப்பட் டென்கண்டோம்
பொல்லா மயலதனிற் புக்கு. 15

### பிறப்பின் துயரைப் பிறங்கக்கூறல்.

பிறவிப் பெருங்கடலிற் பேராது மாறி
யுறக்கருவாம் பேரிருளி லுற்றே - வெறியேறி
யென்னே களித்திடுத லீங்கெவரு மன்னியத்திற்
றன்னோர் நிலைதவிர்ந்து தான். 16

நடைப்பிணத்தை நாமென்று னண்ணு தறிவு
நடைப்பிணநா மன்றென்று நாடித் - திடப்பட்டிங்
காய்ந்தவ் வறிவைக்கண் டாராமை மேலீட்டா
ரோய்ந்திடலே யின்பத் தொடர்பு. 17

மடமையறத் தன்னையே மாண்பாகக் காணிற்
றிடவுடனு மாகவினித் தேரோ - மடமைதா
னெங்குளதென் றுயி னிருக்குமிட நாமாவ
மங்குநமை யன்றியில தால். 18

### வீணர்தமக்கு வேண்டுவே கூறல்.

தன்னை யறியாது தானுளரக் கற்றதனாற்
பின்னைப் பிறப்புப் பெயருமோ - முன்னைவினை
மாளுமோ வந்தோ மயக்க மகன்றிடுமோ
வாளுமோ வாரியன்று னங்கு. 19

அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் போக்கா
திழுக்காயே னிங்கிருந்தி ரென்றே - பழித்துங்
கழிநீர்மண் ணேகம்போல் கண்டபடி கத்திப்
பழுமரமா னோமென் பயன். 20

கண்ணனொடு நற்சனகர் காமியர்போ லேநடித்துந்
திண்ணமுடன் றன்னிலையைத் தேர்கிலரோ - மண்ணுலகி
லெண்ணி யறியாம லேதேதோ விங்களப்பீர்
மண்ணுருவைத் திண்ணமென வைத்து. 21

இல்லத்துற் றல்லறனை யின்பமெனக் கொள்வதெவன்
சொல்லத் திறனில்லாச் சோதிதனை - வல்லுநராய்
நின்றறியாத் தோடத்தா னோர்ந்ததென வேயறியீ
ரென்றுமுமைப் போல்வா ரெவர். 22

உண்டுடுத்துப் பூண்டுமகிழ்ந் துள்ளமெலாங் கொள்ளைகொளப்
பண்டுணர்வை நாமறந்து பாழானா - லண்டிடுமோ
நந்த மரியநிலை நாமறவா தேயிருந்தால்
வந்திடுமே யாநந்த வாழ்வு. 23

சாதியே தங்கூறற் றத்தந் தொழிலாலென்
றுதி சுருதி யறைந்திருக்கச் - சாதிதனை
யுண்மையெனக் கொண்டிங் குளறுவதா லென்பெறுவீ
ரண்டிடுமோ ஞானமுமக் கங்கு. 24

பாமரர்போற் பற்றற்றார் பஃறொழிலிங் குற்றிடினும்
பாமரர்போற் பற்றற்றார் பற்றாரே - பாமரரோ
வுண்மையுல கென்றுணர்வ ருண்மையல வென்பரற்றோர்
திண்மையிது வாகுந் தெளி. 25

ஊற்றெடுத்தாற் போல வுதிக்குமே தன்னிடத்தி
லேற்றசுக மென்றுமறை யிங்கிசைக்குங் - காற்றதனிற்
பஞ்சுபோ லாகாது பாரிற்கல் லொத்திருந்தா
லுஞ்சுநிலை தேறலா மோர்ந்து. 26

சங்கற்பத் தின்னாழுந் தாந்தேர்தல் பாரமெனத்
துங்கவறி வில்லாதார் சொல்வரஃ - தங்கவர்க்குப்
பாரமே யாகும் பரஞானம் பெற்றோர்க்குத்
தூரமே னாகுநீ சொல். 27

வேதாந்தப் போலிகட்கும் விண்விகற்பச் சைவருக்கும்
போதாந்த வுண்மைநிலை போதருமோ - வேதாந்த
மெய்யறிவார்க் கன்றி விளங்குமோ மற்றவர்க்கிங்
குய்யும்வகை யுண்டாமோ வோர். 28

சேட்டை யகன்ற திரமனங்கொண் டன்றோதான்
வீட்டையடைந் துய்ந்தார்கண் மேலோர்கள் - சேட்டை
புரிமனத்தார் வெம்பவத்திற் புக்குநா காழ்வர்
துரியநிலை தேராது சோர்ந்து. 29

அறத்தின் பெருமையை யன்போடுரைத்தல்.

அன்றறிவா மென்னு தறஞ்செய்க வென்றதனை
நின்றறிய மாட்டாது நீமனமே - பொன்றும்
பொருள்குவித்துப் போகித்துப் புண்ணியர்க்கொன் றீயா
துருள்வதுவோ நல்லறந்தா னோர். 30

சினமறுத்துக் காமச் சிறுகறுத்து மெய்ய
மனமொருமைப் பட்டு மகிழ்ந்தே - தனமறிந்திங்
கீயுங் கொடையே யிகபரத்துக் கேதுவதா
மாயினது வான்முத்தி யாம். 31

தொழுதற் குரியார் சொல்லந் தணரெனல்.

அந்தணர்க டாந்தொழுதற் காங்குலத்தா ரென்றறைவ
ரந்தணர்க ளல்லாதா ராங்கவரை - யந்தணர்தா
மெந்தவுயிர்க் கேனு மிடுக்கண் புரியாதா
ரெந்தவுயி ரேன்பணியா தெண். 32

உயிர்பாலிரக்க முறுத னன்றெனல்.

தன்னுயிர்போ லெவ்வுயிருந் தாமெனன் றுணராம
லன்னியநல் லாருயிரை யாவதைப்பீ - ருன்னுகிலீர்
வெந்நீர் தனதுடலில் வேண்டப்பெ றுதுநைவீ
ரென்னோ மதியிலிகா ளிங்கு. 33

புலைத்தொழிலென்றும் புன்மையேயெனல்.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதோ ரூனுண்ணத்
தன்னுவி னீர்பெருக்கித் தாவுகின்றீர் - பன்னூலு
மென்ன தெளிவதற்கோ வேன்படித்தீ ரீதகற்றீர்
முன்னுவிரோ தன்னிலையில் வந்து. 34

### துரியாநுபவந் தோன்றக் கூறல்.

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் வாழ்வார்க ணேரென் - றறியுறுத்தப்
பின்னும் பொறிவழியே பேணித் துரியசுக
மின்னும் பெறற்கிலரா யிங்கு. 35

உணர்வெங்கே யுண்டதனு ளுண்டாம் பிரம
முணர்வுண்டே லுண்டுலக மோரி - னுணர்வோ
டுருமுகமு மாகாம லீங்கிருக்கி லன்றே
குருதுரிய மாகுமெனக் கொள். 36

### அடங்கியநெறியை யமைவுறக் கூறல்.

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காக்கத்
திரஞானஞ் சேர்க்குமெனச் செப்ப - வரன்றானே
வள்ளுவனாய் வந்துபெரும் வாழ்வளித்தா னென்செய்வேன்
றள்ளுவனோ வந்நிலையைத் தான். 37

### பெரியார் பெருமை பிறங்கக் கூறல்.

நிறைமொழி மாந்தரவர் நீள்பெருமை தன்னை
மறைமொழியே காட்டியிவண மன்னுந் - திரமிதெனக்
கூறியநம் வள்ளுவர்தங் கூற்றிற் குறையுளதோ
பேறிதனின் வேறுளதோ பேசு. 38

எங்கே யுலக மிருத்தற்கா மென்றாய்ந்து
துங்க வறிவி லெனத்துணிந்து - மங்கு
மறிவறி யாமை யகன்றவிடத் தென்று
மறிவுமய மாநிற்ப ரார்ந்து. 39

கூறுங் குடும்பத்தின் கோட்பட்டும் பற்றிலராய்
வீறுங் களிப்படைந்த மேலறிவான் - மாறு
முலகவின் பத்திற் குடன்பட் டுழலா
ரலகைத்தே ராமெனவே யாய்ந்து. 40

### பெரியாரடியைப் பேணனன்றெனல்.

குணமென்னுங் குன்றேறிக் கூசா திருந்து
கணமேனு மோகத்தைக் காணா - ரணுவேனு
மிங்கிசையா தேயிருப்ப ரின்பவடி போற்றாது
பங்கமுற லேனோ பகைத்து. 41

### மனத்தின் றகளினை மாற்றனன்றேனல்

மனத்தின்கண் மாசிலனாய் வாழ்தனன் றென்ற
கனத்த மொழிப்பயனைக் காணாத் - தினைத்துணையு
மப்யோ மனத்தை யதுவதுவா கச்செய்வோம்
பொய்யோ துயருறுதல் புக்கு. 42

### கோரவிருத்தியின் கொடுமையினதெனல்.

கோர விருத்தியது கூர்ந்தறித லின்றதனால்
பாரதனி லுண்மைதனைப் பார்க்குமோ - நேரதா
வுண்மைதனை நல்லோ ருணர்ந்திடினு மொவ்வாது
வெண்மையறி வேபோற் பிறழ்ந்து. 43

### நடுநிலையுற்று னம்மழுக்காறறும்.

பொறுமை யடங்கிடற்கோ புண்ணியநூல் கேட்டல்
பொறுமைவிரி தற்கோ புகல்வீர் - பொறுமையினை
விட்டொழிக்க வேவேண்டின் வேறி னடுநிலையிற்
கட்டுப்பட் டாற்றொலையுங் காண். 44

### முத்தர்நிலையே மெய்ந்நிலையாமெனல்.

எத்தொழிலைச் செய்தாலு மெத்தவத்தைப் பட்டாலு
முத்தர் மனமிருக்கு மோனத்தி - லெத்திறத்து
மென்று மதுகேட்டு மேனோ மதங்கொள்ள
லன்பார்ந்து வாழ்வதறி வாம். 45

### குதர்க்கந்தன்னைக் கூறல்பிழையெனல்.

கற்றபடி நிற்கவெனக் காதலுட னோதிநிலை
நிற்கவறி யாது நிலைகெட்டுப - பற்காட்டித்
தர்க்ககுதர்க் கங்களையே தாரகமாக் கொண்டுவீ
ரொர்க்கத்துக் கோர்துணையென் ரோரார்ந்து. 46

### பத்தி சாதனத்தாற் பரநிலை யாமெனல்.

தன்னையுணர் தற்குரிய சாதனத்தைக் கேட்டறிமின்
பின்னையஃ தின்றேற் பிறப்பறுக்கு - முன்னவன்றன்
சீர்பாடி யாடிச் சிறந்தவன்பர் போற்றுதிமின்
வார்ந்தநிலை தானே வரும். 47

பத்திசெயி லன்றோ பகர்காணஞ் சுத்தமுறும்
பத்தியிலார்க் கென்வாய்க்கும் பாரதனிற் - சித்திமுத்தி
யென்றுமின் றாகுமன்றோ வீதுணரா தென்செய்தீ
ரோன் றுவிரோ தன்மயத்தை யோர்ந்து. 48

### அநித்தியமோர்பவர்க் கருணிலைவருமெனல்.

நாக்குளறிக் கண்மயங்கி நாறுமுடல் வீழாமுன்
னோக்குமொரு மின்பநிலை தேடியே - தூக்கமின்றிச்
சொந்தநா ளுகித் துயர்களைந்து நில்லோம்பின்
னைந்தநிலை யெய்துவமோ விங்கு. 49

நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினையை
மீச்சென்று செய்வதுதான் மேலென்று - பேச்சொன்றால்
சொற்றதிரு வள்ளுவனார் சொல்லிற் குறையுளதோ
பற்றுவது நன்றாம் பரிந்து. 50

### கொலைசெயார் மாண்பின் குணங்கண் டுரைத்தல்.

கொல்லாமை யொன்றே குணக்கேட்டை நீக்குமென
நல்லோ ருரைத்தபடி நாஞ்செய்ய - வல்லவரே
யெல்லா வுயிருநமை யேத்தாதோ தெய்வமெனச்
செல்லாவோ தீவினைக டேய்ந்து. 51

### விழைச்சுப் புணர்ச்சியால் வீணாவாயெனல்.

இயமனைப் போன்றே யிருக்கின்ற மாதர்
புயமருவுங் காமவலைப் புக்கிங் - குயும்வகையைக்
காணாது கண்கெட்டுக் காலங் கழித்தனையே
நாணா மடநெஞ்சே நன்கு. 52

### தன்னுயிர்போல மன்னுயிர்க் காவெனல்.

தன்னுயிர்க்கின் னாமைவரின் றானே தடுத்துவே
றின்னுயிர்க்கின் னாமைவரி னென்றடுக்கீர் - பன்னூல்
படித்தும் பயனென்னே பாபிகா ளீவீ
ரெடுத்தவுடற் கென்பயனா மிங்கு. 53

### நாரியரின்பா னாசமா வாயெனல்.

குரும்பையொத்த மென்முலையார் கூட்டுறவா லென்று
நரம்பென்பு தோன்றிடவே நைய்ய - விரும்புவியி

லென்னை யிடர்ப்படுத்தி யிங்கென்கண் டாய்மனமே
யென்ன கொடுமை யிது. 54

ஆசாரமதே யருங்கதிக் கேதெனல்.

ஆசார மின்றே லருங்கதியு முண்டாமோ
பேசா வநுபூதி பெற்றிடுமோ - தாசானு
தாசனெனக் கூறுந் தகுதியுமங் குண்டாமோ
வீசனரு ளேய்ந்திடுமோ விங்கு. 55

சொரூபநிலையே சொந்தமென் றுணர்த்தல்.

சொரூபநிலை யின்னதெனச் சோர்வின்றிக் கண்டோர்
சொரூபமே தானுச் சுகிப்பர் - சொரூபநிலை
யின்ன தெனவறியா ரெய்துவரோ வந்நிலையைப்
பின்னமுறு நெஞ்சேநீ பேசு. 56

ஆரியனளித்த தமிர்தமேயெனல்.

சச்சிதா நந்தனடி சார்ந்தையாக் கண்ணனெனு
முச்சிதநல் லாரியன்ற னேதுகழல் - தச்சனென
வோரா தெனக்களித்தா னுன்றனிலை யீதென்றிங்
காரா வமிர்தமே யாங்கு. 57

ஆரியன்மொழியா லான்றோரைச்சேறல்.

தேடக் கிடையாத தேசிகனை நின்மொழியாற்
றேடக் கிடையாத் திருவடைந்தே - னூடியொன்றைக்
கூடி மனமகிழ்ந்தேன் கூர்ந்தவறி வாளர்பிற
கோடி மகிழ்ந்திடுவே னுற்று. 58

மூவர்தந்நிலையின் முடிபிதென் றுரைத்தல்.

சிற்சொரூப நாட்டஞ் சிதையாப் பெருந்தவத்தோர்
தற்சொரூப நாட்டந் தவிரார்கள் - சொற்சொரூப
நிச்சயமே யென்று நெடுமா லயன்முக்கலோ
ருச்சிதமாக் கொண்டதனு லோர். 59

கல்வியே தனித்துக் கரைசேர்க்காதெனல்.

கலகலவென் றேகல்வி கற்றதனு லென்ன
நலமலியு மெய்ஞ்ஞான நண்ணு - பலகற்றும்

வாலறி வில்லா மனமுடையோ ரிவ்வுலகிற்
சீலரா வாரோநீ செப்பு. 60

உற்றுற்றுத் தன்னிலையை யோரா தவலமதாக்
சற்றுளறிக் காலங் கழிப்பதொடு - பற்றற்ற
நற்றவத்தார் போல நவின்றாலும் வேதஞ்சொல்
லற்றநிலை தான்வருமோ வாங்கு. 61

பிறப்பகற்றார்க்குப் பேச்சுமிகுமெனல்.

கொண்டகுடும் பத்திருந்து கூத்தாடு ஞானியரை
யண்டி யறிய வறிவில்லா - ரெண்டிக்கும்
போற்றப் பிறர்தம்மைப் போயளப்பர் கற்றதெலா
மாற்றவறி யார்பிறப்பை மற்று. 62

சீற்றமின் மனத்தாற் செறியாத தின்றெனல்.

உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
னுள்ளான் வெகுளியென் றோர்மினென்ற - வள்ளுவனார்
சொல்லுக் கிலக்காகிச் சோரு மனமின்றே
னல்லுணர்வு வாய்க்குமே நன்று. 63

இன்னாபுரியி லெவைக்குமின் பின்றெனல்.

முற்பகலின் னாபிறர்க்கு மொய்ம்பிற் செயிலின்னா
பிற்பகலிற் றற்கே பிறங்குமெனத் - சொற்றவுரை
கேட்டும் பிறவுயிர்க்குக் கேடுநினைந் தேதிரிந்து
நாட்டமிலா திங்கழிந்தோ நாம். 64

ஐயநீங்கார்க் கருணிலை யின்றெனல்.

ஐயத்தி னீங்கி யகன்றார்க்கே மெய்யுணர்வென்
றைய னுரைத்த வருண்மொழியான் - மையலற
வுய்யும் வகைதெரிந் தோயாப் பெருவெளியா
யெய்துவமோ வென்றே விவண். 65

நற்சார்பால்வரு நன்மையை யுரைத்தல்.

சார்புணர்ந்து சார்புகெடச் சார்ந்தா ரருணிலையைச்
சார்தலுண்மை யென்றருளுஞ் சான்றோர்தங் - தேர்ந்தமொழி
யோரா துணர்வழிந்தோ முய்வமோ வுத்தமர்காள்
சீராருந் தன்மயத்திற் சேர்ந்து. 66

மனவொடுக்கத்தான் மன்னுநிலையெனல்.

மனமாதி யுள்ளளவு மாறா மயக்க
மனமாதி யின்றேன் மயக்கந் - தனக்காகா
தென்று சமாதி யிருந்துநெடு நாட்பழகி
லொன்றோதா தன்மயந்தா னுற்று. 67

பற்றற்றார்க்கே பரகதியா மெனல்.

பற்றற்று நிற்பார் பரவெளியா தல்லுண்மை
கற்றுற்று நிற்பவர்தாங் காண்பரென - முற்றுணர்வா
லென்றுரைத்தா னையாக்க ணைந்தை குருநாதன்
றன்றுதன துண்மையினிற் றோய்ந்து. 68

ஓராதார்க்கிங் கொன்றுமின்றெனல்.

ஓராமற் றன்னிலையை யுற்றா லுடலறுமோ
காராற்சங் கற்பமெனுங் கட்டறுமோ - தீரா
வினையறுமோ வென்றோ விகற்பமது தேரேன்
துனியகற்று மாரியனே சொல். 69

உடம்பினிழிவை யுணரக்கூறல்.

விட்டுவிடா மற்றொன்றும் விண்பாழ்ஞ் சகமதனிற்
கட்டுண்ட சட்டை கழுகுதட்டி - யிட்டமுழும்
பொத்தவுட லென்று புகழ்புரியார் மெய்யுணர்ந்தோர்
சத்தையற்ற தென்றுணர்ந்து தான். 70

நாட்குநாட் டேக நலியநரை மூப்புற்றுக்
காட்டுநரிக் கூணுதல் கண்டிருந்தும் - வாட்டமின்றி
யின்னுமுல காதற்கிங் கென்றோ வினைசந்திடுதற்
றுன்னுமறி வாதலின்றிச் சோர்ந்து. 71

இச்சையே பிறப்பிற் கேதுவாமெனல்.

அவாவில்லார்க் கின்றா மருந்துன்ப மென்றா
லவாவற்று நம்மனத்தை யாழ்த்திற் - றவாதநிலை
யின்றே வருமெனற்கிங் கேதைய மொன்றுமின்றாம்
பின்றான் பிறப்பெனலென் பேசு. 72

சங்கற்ப நீங்கின் சாரு நன்னிலையெனல்.

சங்கற்பக் கட்டொழிக்கிற் சாரா சகத்தோற்ற
மிங்கற் பமுழுமைய மேனிதனிற் - சங்கற்ப

மான்மாவன் றுயினஃ தான்மாவை யன்றியிலை
யேன்காணீ ரிந்நிலைமை யிங்கு. 73

சங்கற்ப முள்ளவிடஞ் சாரும்பல் தோற்றங்கள்
சங்கற்ப நீங்குமிடந் தன்வடிவா - மிங்கனுவு
மையமிலை யென்றே யறையும்வே தாந்தங்க
ளுய்யும்வகை தேர்வா யுவந்து. 74

தூலநோக்ககலிற் றேன்றும் வெளியெனல்.

மண்ணாதி கூட்டமதே மாவாதி தேகம்பின்
மண்ணுக்கு மக்கூட்ட மாமனமென் - றெண்ணாது
வீணே யழிகின்றோம் விண்ணாட்ட மேவுவமோ
காணேங்கண் ணாகநிதங் கண்டு. 75

ஆய்ந்தறிவுற்ற லரியவீடாமெனல்.

எப்பொருள்க ளெங்கெங்கே யெவ்விதமாத் தோன்றிடினு
மப்பொருளை யங்கங்கே வாய்ந்தறிந்தாற் - றப்புடைய
நீங்குதலில் லாவறிவு நேரா விளங்குமதிற்
றாங்குவதே நல்லசுகந் தோய்ந்து. 76

நிட்காமியத்தா னிகழ்வதுரைத்தல்.

தொல்லைவினைக் கீடாச் சுகிப்ப ருலகவின்பை
யல்ல லொழிக்க வறிவரோ - வல்லாய்கேள்
சொல்லுநிட் காமியமாய்த் தூன்றுதவ மேசெய்யி
னெல்லையற்ற வின்பமா மிங்கு. 77

அபேதஞானம் யார்க்குநன்றெனல்.

பேத மபேதமெனப் பேசு மதமிரண்டிற்
பேதமத மோவுலகிற் பீழைதரும் - பேதமற்ற
நந்நிலையே முத்திதரு நன்ஞா னிகள்சொற்ற
வந்நிலையே நந்நிலையென் றாய். 78

இல்லறத்தாரு மெய்துவ ரறிவெனல்.

குடும்பந் தனிலிருந்து கொள்ளிவைத்துத் தம்மை
மடம்பற்று மல்வாழ்வார் மாண்போர் - திடங்கொண்ட
வான்றோர்க ளெவ்வறத்து மான்றவறி வாதலுண்மை
சான்றுதிரு வள்ளுவரே தாம். 79

### பூரணஞானி புரிவதொன் றின்றெனல்.

எவ்விடத்துந் தம்முருவே யென்றுணர்ந்தா ரெங்குறுவ
ரெவ்விடத்துந் தாமாகா தென்னுவ - ரெவ்விடத்துங்
காணும் விகற்பமெலாங் காரியமென் றோராதார்
பேணுவதா லென்பெறுவர் பேசு. 80

### தன்னுந் சுகமெனத் தடையறக் கிளத்தல்.

சுகந்தன் னுருவென்று சொல்லும்வே தாந்தஞ்
சுகமயமென் றோதுந் துவிதஞ் - சுகமோ
வயலாகி லந்தோ வலைதற் கிடமாம்
பயமாமென் றேனறியீர் பார்த்து. 81

சுத்தாத் துவிதமெனச் சொல்வரிரண் டாச்சிலவர்
சித்தப் பிரமமதாற் றேர்தலிலா - ரித்தரையி
லென்று மிவர்க ளிடர்க்கடலில் வீழ்வரலாற்
பொன்றுவரின் பஞ்சேரார் புக்கு. 82

### வேதாந்த மொன்றே மேலதென் றுரைத்தல்.

உலகில் பலமத முண்டதனு ளுண்மை
யிலகத் தெரித்திடற்கின் றென்றே - பலகலையி
லத்துவிதத் துண்மையினை யாங்காங் கறைந்தனரால்
பித்துறுபே தம்மகலப் பேர்ந்து. 83

### சங்கரர்மதமே ததுமதமாமெனல்.

மெய்ம்மறைக்கு மாறுபட்டார் மெய்காணா ரத்துவித
மெய்யுயிர்போ லென்பாது மேலன்று - முப்புநெறி
காட்டுநஞ் சங்கரனார் கானனீ ரென்றுலகை
நாட்டினா ரத்துவித நன்கு. 84

### ஜீவன் முத்தரைச் சேற னன்றெனல்.

அன்னியத்தின் முத்தியென வாதரத்தோ டெங்காளு
முன்னியுனி நின்றாலு மொன்றிடுமோ - பின்னிலத்திற்
கன்னியினி லுற்றபுட்போற் கட்டுண்டு முத்தாடி
மன்னிடிலன் றேவருநன் மாண்பு. 85

### நிராபேட்சிக வியாபக நேரவுரைத்தல்.

அறிவி னுதய மணுவளவு தோன்றி
னறிவகண்ட மாயொளிர லாகு - மறிவு

வுடலளவா நிற்கி னுலகளவா குந்தான்
றிடலறிவா லீதுணர்மின் றேர்ந்து. 86

### சர்வம் பிரஹ்மமாய்த்தாமுணர்ந் துரைத்தல்.

மனத்துருவம் யாதென்று மாறாது நோக்கின்
மனம்பிரஹ்ம மாயுருவ மாறு - மினத்ததுவு
மின்னபடி யாகுமெனி னெல்லாம் பிரஹ்மமே
யுன்னிலது வந்தானென் றோர். 87

### அறிவே யின்புரு வாமென்றுணர்த்தல்.

மனத்தின்வே கத்தை மடித்துண் முகத்துட்
கனத்தவொளி யிற்செலுத்திக் காணின் - றினைத்தனையு
மன்றமயற் றோன்றாது மாவறிவின் பாவிளங்கு
மென்றும் பொருளா யிருந்து. 88

தனியிருந்துண் ணோக்குங்காற் சங்கற்ப மொன்றே
யினிதாய்ப் பலபலவா யேய்ந்து - துனிதரலா
லங்கே யதையாய்ந்தே யாதார நாட்டமுறிற்
பங்கமிலாப் பேரொளியாம் பற்று. 89

### அநுபவ வுண்மையை யாணையிட்டறைதல்.

உலக முதற்பொருளா யுற்றொளிர்வ தேதோ
கலகமற வவ்வொளியைக் கண்டே - னிலகிடவே
பண்டைமறை விண்ட பரமன்மே லாணைபடி
யண்டரு மேற்கவிதை யாய்ந்து. 90

### தத்துவ மகற்றித் தன்னுண்மை சாற்றல்.

தாகமுடன் பேரொளியைத் தானறிய வேண்டுமென
வேகமன மோடவின் பாகவிருந் - தாகமுதற்
றத்துவங்க ளெல்லாந் தனித்தனியே நேதித்தாற்
சித்துருவ மாத றிடம். 91

உடலகலு முன்ன முணர்வீரோர்ந் துண்மை
நடலைவாழ் வென்றுலகை நாடிப் - படபடென
வுண்முகத்தி னுள்ளுள்ளே யூர்ந்தூர்ந்து பாழ்கடந்து
தண்மயமா நிற்பதனைக் கண்டு. 92

உ

சிவகுருநாத பரப்பிரம்மனே நம:

சிவசிவபாலனுட்டுவை திருவடி துணை.

# சிவமலைபாண்டவன்

## லீலாவிசேஷக் கீர்த்தனைகள்.


எம். விஜயராவ்

(Draftsman Chief Engineer's Office,

P. W. D., Madras.)


இயற்றியது


திருவல்லிக்கேணி,

ஸ்ரீ வாணீ பூஷணம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1917


(For free distribution)

# முகவுரை

ஆண்டவன் அடிமையாகும் விம்வாமையரத்தில் கோவில்கொண்டு விளங்கும் சிவமலையாண்டவன் ஸன்னிதானத்தில் கிருத்திகைதோறும் நடந்துவரும் பஜனையில் ஆனந்தக்களிப்புடன் ஆண்டவன் புகழையும் பெருமையையும் மனமுருகிக் கண்ணீர் சோரப்பாடி வருநாளிலே ஆண்டவன் பாமரனாகிய தமியனிடத்து மனமிரங்கி ஸ்வப்னாவஸ்தையில் காட்டிய பல லீலாவிசேஷங்களை அவ்வய்யர் கூறியபடி கீர்த்தனைகளாகப்பாடியுள்ளேன்.

பஜனைகளிலும் மற்றும் ஸ்ரீமுருகபிரானிடத்து அன்பு கொண்டோரேனையோர்களுக்கும் உபயோகமாகு மென்று நம்புகிறேன்.

ஆண்டவன் திருவருளால் பாடிய இக்கீர்த்தனங்களை அவனது திவ்ய சரணாரவிந்தங்களில் திரிகரண சுத்தியுடன் அர்ப்பணம் செய்கிறேன்.

திருவல்லிக்கேணி
1-8-1917

எஸ். விஜயராவ்
ஆண்டவன் அடிமை



குணமா நிதியே குகனே குருவே
கணமே வருவாய் கருணைக் கடலே
மணமே கமழும் மலரார் கழலாய்
மணிமா நிறமார் மயில்வா கனனே

ஶ்ரீ.

ஓம்

வரதசித்தி விநாயக மூர்த்தயே நம:

சிவமலையாண்டவன் திருவடி சரணம்.

# சிவமலையாண்டவன்

## லீலாவிசேஷக்கீர்த்தனைகள்.

1 இராகம் சாவேரி ஆதிதாளம்

பல்லவி

வேலுடனும்சிவ பாலனைத்துதித்திட
[சீலமுடனேவந்து

அனுபல்லவி

காலமறிந்தேதபேதை யாலநெஞ்சிற்புகுந்து
லீலையைக்கனவினிற் காட்டியதையென்சொல்வேன்

சரணங்கள்

(1) கூட்டமாய்க்கோழிமயில் ஓட்டமாய்வட்டமிட்டு
[ஆட்டமாடியேவரவும்
மட்டில்லாத செம்பொற் கட்டிபோல் மேனியுடன்
[சிட்டக்குகனுமாட

*

சேஷ்டையின்றியேபுறுங் காஷ்டமௌனியையிந்த
[சிரேஷ்டக்குழவியாரென
சஷ்டியிலுதித்தவென் னிஷ்டபுத்திரனுமுன்
கஷ்டத்தைத்தீர்க்கும்புண்ய திருஷ்டியோமென்றிட்
டாரே (வேலுடனும்)

ஆண்டவன் அடிமையாகும் விப்ரவராதய்யர்

(2) சிறந்த மரங்களடர் படர்ந்த கானகத்தில் மெய்
[மறந்து விரைந்தே யான் செல்ல
பெருத்த கிளைகள்வழி மறைத்திடும் பெரிய தோர்
[மரத்தடி சேர்ந்தேனே யெள்ள.
திருமுருகன் விக்ரஹம் மரத்தினடு வமர்ந்த
[திறத்தையான் கண்டுமே கொள்ள
மரத்தினடுவிலேயோர் பெருத்தகுகையுமாக
சிறந்த விக்ரஹம் வீழ்ந்து தரித்ததோர் குழவியுரு
(வேலுடனுடும்)

(3) நாற்ற மலர்கள் கொய்ய ஆற்றங்கரைக் கேகவே
[காற்று மழையால் வருந்த
பற்றுக்காகவே யானும் சுற்றிடவோராலயம்
[சற்றுதூரத்திலே கண்டு
நற்றவத்தினாற் கோயில் சுற்றியே வலம் வந்தேன்
[உற்றவரிங்குண்டோ வென
நூற்றெட்டு சிவலிங்கம் தோற்றிடவே யென்முன்னர்
சாற்றியேமலர்களை போற்றிசெய்தெதிர் நின்றேன்.
(வேலுடனுடிப்)

(4) மாதவனென்னும் ஹரி பேதமில்லாமற்சிவ
[போதமுருகனுடனே
ஆதியந்தமுமில்லா வேதஸத்துக்களான ஸாது
[குழந்தைகளாக
ப்ரீதியாகவே விஸ்வ நாதன் ஆறுமுகத்தின்
[பாதங்களைந்தியே யாட
ஸ்ரீதரனையும் யான் ஆதரவுடனேந்தி
போதமுற்றேயாடிட நீதியராடினாரே (வேலுடனுடிப்)

(5) தாஸன் வெங்கிட்டராயன் வாஸஞ்செய்யுமிடத்தில்
[நேசர்களனேகர்கூட
மோசம் போகாமல் வெகு ஆசையுடனே குமா
[ரேசன்பஜனையும் செய்ய
ஈசனுய் வந்தமுரு கேசன்தன் லீலைகளை
[நேசன்வீட்டிலே காட்ட
கேசவன் மருகோனு காசமார்க்கத்திற்பிர
காசப்பரிமேலேயுல் லாசமாய் வந்திட்டாரே.
(வேலுடனும்)

(6) அடுத்ததோர் புறந்தன்னில் நடந்திடும் திருவிழா
[விடத்தையான் தேடியே செல்ல
நடந்துசெல்கையிலங்கோர் இடந்தனில்கண்டுகோயில்
[அடைந்தேனனதனுள்ளே
நடந்திடும் ஆண்டவ னடிமை விஸ்வனுனைதயரை
[இடத்தின் பேர்யான் வினவ
நின்றவர்சிவமலைக் குன்றெனப்படுங்கயிலை
என்று ரைத்திட்டேயன்னூர் அன்றெனக்குமே காட்ட
(வேலுடனும்)

(7) தூங்க விஸ்வனுதையர் தாங்கி நூற்றெட்டு வேற்கள்
[தங்கினூர் மலையடியில்
அங்கவருடனேயொ துங்கியே யானும் நிற்க
[சங்கீதநாதமும் கேட்க
எங்கென்று திரும்பவும் அங்கொரு கூட்டமாய் ஜ
[னங்களும் வரவேகண்டு
மங்கைவள்ளியை நெ ருங்கியே யணைந்தோனை
இங்கு காணலாமென்றே ந ங்களும் வந்தோமென்றூர்.
(வேலுடனும்)

(8) மங்கள வேற்களுடன் அங்கிமலைமீதவர்
[அங்குள்ளோருடனே யேற
மந்த ஹாஸத்துடனே யந்த வேற்களிலொன்றை
[சொந்தத்துடனே யெடுத்து
இந்த வேற்கள் யாவையும் அந்தந்தப்படியினில்
[வந்தோர் முன் தாபிப்பேனென
எடுத்த வேலதனையோர் படிதனிலே தாபிக்க
அடுத்திருந்த தாசர்கள் படைத்திட்டபூஜைகேளீர்.
(வேலுடனாடும்)

(9) என்னபுண்ணியஞ்செய்தோ சின்னஸாமய்யர்தானும்
[முன்னதாய்ச்சந்தணம் சாற்ற
மந்தஹாஸமாகவே சுந்தரமய்யர் கொண்டு
[வந்த குங்குமமிடவே
தாமதமின்றியே செந் தாமரை மலர்களை
[சாமினாதய்யருஞ்சாற்ற
அல்லும் பகலும் கார்த்த நல்ல திருவேங்கடம்
மல்லிகை மாலைதனை மெல்ல வேல் மேல் சாற்றிட
(வேலுடனாடும்)

(10) அங்கு வேல் முன்னே நின்று வெங்கிடராயர்தானும்
[மங்களாரதியும் காட்ட
அருமையாயுள்ள பல முருகன் திருப்புகழ்கள்
[பெருமையில் விஜயன்பாட
கண்யாகுஞ்சுப்ர மண்ணியர்களுடனே
[புண்யராமச்சந்திரனும்
இரங்கி மனதில் வேர்த்து நெருங்கும் பாவந்தவிர்த்து
கரங்களிரண்டும் சேர்த்து சிரங்களின் மேற்குவித்து
(வேலுடனாடும்)

(11) நட்டவேர் வேலைச்சுற்றி இட்டமாகவே கையை
[க்கட்டியே தொடர்ந்திடவும்
அட்டியின்றியிலெட்மை யொட்டி விஸ்வனுதையர்
[கட்டியணைத் தேவரவும்
நிட்டையுடனேயிப் பேற் பட்ட பூஜையைச்செய்து
[எட்டினும் மேற்படியை
தட்டில்லாமலேயங்கும் மட்டில்லாப்பூஜை செய்து
கிட்டிடக்குமரன் மலை எட்டியடிகள் வைத்தோம்.
(வேலுடனும்)

(12) அடிக்கொன்றுயமைத்துள்ள படிக்கோர் வேல்தனை
[நாட்டி நொடிக்குள் ஸன்னதி சேர்ந்தோம்.
எடுத்துப்பொன்வேலைகுஹன் அடிக்கருகில்தாபித்து
[படித்தாரே முருக நாமம்.
அடக்கவணக்கத்துடன் பிடிக்க கற்பூரதீபம்
[திடுக்கிட்டெழுந்து பார்த்தேன்.
கடைக்கணில் நீர் பெருக படுக்கமனம் வராமல்
அடக்கொணுமகிழ்வுடன் படிக்கலானேனே நாமம்.
(வேலுடனும்)

(13) தவமுனிகளே தினம் சிவமலைப்பொருள் நாமம்
[பவமருந்தெனவே யுண்பார்.
கறந்த பால் கன்னற்சுவை சிறந்த நாமத்திலுண்டு
[அருந்துங்கள் செய்தவன் தொண்டு.
சிறந்தஷண்முக நாமம் மறந்திடாவிடில் நேமம்
[பறந்திடும் பலபாவம்.
மலைபோல்பொங்கிடும்சிவ மலையோன்காட்டியலீலை
அலைகொள் விஜயராயன் நிலையில்கண்டதே நியாயம்.
(வேலுடனும்)

## 2 நாமாவளி

(1) அஞ்சவேண்டா மென்றுசொல்லி ஆதரிக்கும்
முருகய்யா
ஆதரிப்பா யன்பர்களை ஆண்டவனே முருகய்யா
(2) இப்புவியி லிணையிலாத ஈசனன்றோ முருகய்யா
ஈசகந்த நின்னருளை ஈன்றிடுவாய் முருகய்யா
(3) உண்மைதெய்வ முன்னையேயான் ஊகிப்பேனே
முருகய்யா
ஊகிப்போர்கள்ஊழ்வினைகள்ஊற்றறுக்கும் முருகய்யா
(4) எண்ணிமனம் புண்ணாகியே ஏக்கமுற்றேன் முருகய்யா
ஏக்கமுற்ற ஏழைகளை ஏற்றுக்கொள்வாய் முருகய்யா
(5) ஐந்துமொரு முகம்படைத்த ஒருவனேநீ முருகய்யா
ஒன்றுமறியாப் பேதைவார்த்தை ஒத்துக்கொள்வாய்
முருகய்யா
(6) ஓம்முருகா வென்றநாமம் ஔஷதமே முருகய்யா
ஔதாரிய குணசீலா ஔக்ரனுகும் முருகய்யா

---

## 3 இராகம் ஆரபி ஆதிதாளம்

**பல்லவி**

சிரித்து வேலுடன் சிவமலை மிசைநின்ற சிறுபாலா

**அனுபல்லவி**

குறித்துப்பாடுவேன் குஹநிதிதாளடி குருசீலா

**சரணங்கள்**

(1) சிறந்தமாமயில் முதுகினிமேலறிநீ வருவாயே
பரந்த பாரினில் வழிப்படுஞ்சீரருள் தருவாயே
(2) உதித்த சூர்யனைப் பழித்திடும்மாணிக்ய மணிவேலா
விதித்தஊழ்வினை ஒழித்திடவேண்டுவேன் குணசீலா

(3) ஒளித்துப்பேசிடேன் என்பதைநீயின்று அறிவாயே
களித்துகாருண்ய கருணாரஸமழைச் சொரிவாயே
(4) அடுத்து ஆவலாய் அடியிணைப் போற்றினேன் முருகேசா
தடுத்துத்தாய்போல்தயைபுரிவாயென்றேன் ஸருவேசா
(5) கணக்கிடாப்பிணிநொடிதனில் போக்குமென்குமரேசா
வணக்கமாய்ச்சிறு விஜயனும்போற்றிடும் அமரேசா.

---

## 4. நாமாவளி

(1) ஷண்முக நாமமே ஸஞ்சீவி
எண்ணுவ ணுருவன் சுகஜீவி
(2) வரகுண சீலனே சிவலோலா
சரவண பவனே சிறுபாலா
(3, குருநிதி குணமே குமரேசா
பரகதி குஹனே ஸர்வேசா
(4) குபர தயாபர குருநாதா
சமரபு ரீவர சுரநீதா
(5) கண்மணி உருவே கண்ணியனே
பொன்மணி அருளே புண்ணியனே
6) தாண்டவப் பொருளே தாரகனே
வேண்டுவே னருளே வரசுனே
(7) நண்பரைக் காட்டும் காரணனே
துன்பம தோட்டும் பூரணனே
(8) சிறுவனை யின்றே பாடுங்கள்
இருவினை கொன்றே யாடுங்கள்

(9) மறுபடி கந்தனே வாராயோ
திருவடி தந்தெனைப் பாராயோ

(10) கஜமுக னனுஜனைக் கண்டேனே
விஜயன் நிஜபலங் கொண்டேனே.

---

சிவமலை யெந்தை திருவடி வாழ்க

---

முற்றிற்று

